18th March 1964]

பட்டபிறகுதான் சென்னைபல்கலைக் கழகம் பற்றி எடுத்துக்கொள்ளவேண்டும். மதுரைப் பல்கலைக் கழகம் எத்தகைய வகையில் உருவாக்குவது என்பது இன்னும் முடிவாகவில்லை.

Central University at Karaikudi

* 312 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any communication has been received from the Union Ministry of Education regarding the proposal to establish a Central University at Karaikudi, to be named as Alagappa University; and

(*b*) if so, the details of the same?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : டாக்டர் அழகப்பச் செட்டியார் உயிரோடு இருக்கும்பொழுது நம்முடைய மாநில அரசாங்கத்தின் உதவியோடு மத்திய அரசாங்கத்திடம் இதுபோன்ற ஒரு திட்டத்தைப் பெற முயன்றாரா ? அதற்கு இந்த மாநில அரசாங்கம் ஆதரவு தருவதாக உத்தரவாதம் அளித்ததா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர் முயன்றிருக்கலாம். அதுபற்றி இந்த மாநில அரசாங்கத்திடம் தகவல் இல்லை.

Transfer of " Education " to the " Concurrent list "

* 313 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any proposal has been received from the Central Government in favour of transferring the subject of ' Education ', to the concurrent list of the Constitution; and

(*b*) if so, the views offered by the State Government?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No. Sir.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : இப்படி அரசியலமைப்பு சட்டத்தைத் திருத்துவதன் மூலமாகக் கல்வித்துறையில் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் இருக்கவேண்டுமென்ற கருத்தை மத்திய அரசாங்கமும், மத்திய கல்வி அமைச்சர் அவர்களும் கொண்டிருக்கிறார்களா ? இதுபற்றி இந்த மாநில அரசாங்கத்தின் கருத்து என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் ' அப்படியில்லை ' என்று கூறியிருக்கிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த அரசாங்கத்திற்கு ஒன்றும் வரவில்லை. கன்கரண்ட் ஸப்ஜெட்டாக வைப்பது பற்றி அவர்கள் யோசிக்கிறார்கள் என்றால், இதிலே ஆதிக்கம் செலுத்தவேண்டுமென்ற வகையில் அல்ல. மத்திய அரசாங்கத்திற்கும் பொறுப்பு இருக்கிறது. கூடியவரையில் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியான கல்வி முறை கொண்டுவரப்படவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் யோசிக்கிறார்கள் போலும். அதற்கு அவசியமுண்டா என்பது இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டிய விஷயம். அதற்கு அவசியமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.